பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 05 2024 **FRIDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தொகுதி வாக்குப்பதிவு தொடர்பாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ள கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

2. மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு, உச்சநீதிமன்றம் இடைக்கால ஜாமின் வழங்கியுள்ளது.

3. சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 6 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

4. வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட பணிக்குழுவின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

5. உலக மல்யுத்த ஒலிம்பிக் தகுதிச் சுற்று போட்டியில், இந்தியாவின் **Nisha** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு குறித்த விவரங்கள் வெளிப்படைத்தன்மையுடன் வெளியிடப்படுவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவுக்கு எழுதியுள்ள பதில் கடிதத்தில் தேர்தல் ஆணையம் இதனை தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவு சதவீதம் குறித்த விவரங்கள், அதற்கான கைபேசி செயலியில் வெளியிடப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் தாமதம் ஏற்படுவதாக கூறும் குற்றச்சாட்டுகள் தவறானவை என்றும், அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற தவறான குற்றச்சாட்டுகள் தெரிவிப்பதை திரு. மல்லிகார்ஜுன கார்கே தவிர்க்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் பிரதிநிதிகள் குழு, இன்று புதுதில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமாரை சந்தித்து மனு ஒன்றை அளித்தது.

இந்த சந்திப்பிற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அபிஷேக் மனு சிங்வி, 45 நிமிடங்கள் இந்த சந்திப்பு நிகழ்ந்ததாக தெரிவித்தார்.

தேர்தல் ஆணையத்திடம் இதுவரை காங்கிரஸ் கட்சியின் சார்பில் 11 புகார்கள் கொடுக்கப்பட்டதாக கூறினார்.

எதிர்க்கட்சிகளின் சார்பில் ஆயிரத்து 520 புகார்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுவரை, இந்த புகார்கள் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் திரு. அபிஷேக் மனு சிங்வி கூறினார்.

>>>><<<<

மக்களவைக்கு நான்காம் கட்டமாக வரும் திங்கட்கிழமை தேர்தல் நடைபெறவுள்ள 96 தொகுதிகளில் பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைகிறது.

இதனையடுத்து, பிஜேபி, காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி மற்றும் இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, தெலங்கானாவில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

இந்த மாநிலத்தில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலின் போது பல்வேறு வாக்குறுதிகளை அளித்து, அதிகாரத்தை கைப்பற்றிய காங்கிரஸ், அவற்றை நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

மக்கள் நலனில் அக்கறையில்லால் காங்கிரஸ் செயல்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி குறை கூறினார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, உத்திரபிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

வேலையின்மை பிரச்சினைக்கு தீர்வு காண, பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்றால், அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இதற்கான உறுதிமொழிகள் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருப்பதாகவும் திரு. ராகுல் காந்தி தெரிவித்தார்.

மேற்குவங்கத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா, பழங்குடியினர் நலனுக்கு பிஜேபி தலைமையிலான மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக தெரிவித்தார்.

குடியுரிமை திருத்தச்சட்டம் யாருடைய குடியுரிமையையும் பறிக்காது என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

மேற்குவங்கத்தின் வளர்ச்சியில் திரிணாமுல் காங்கிரஸ்கட்சிக்கு அக்கறையில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

அம்மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், உத்தரபிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

தொழிலதிபர்களுக்கு ஆதரவாக பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

விவசாயிகளின் நலனை பாதுகாக்க மத்திய அரசு தவறிவிட்டதாகவும் திரு. அகிலேஷ் யாதவ் தெரிவித்தார்.

>>>><<<<

மக்களவைத் தேர்தலுக்கான மேலும் ஒருவேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

இதன்படி, பஞ்சாப் மாநிலம் **Fatehgarh Sahib** தொகுதியில், திரு. **Gejja Ram Valmiki** போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு, உச்சநீதிமன்றம் இடைக்கால ஜாமின் வழங்கியுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. **Sanjiv Khanna,** திரு. **Dipankar Datta** அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

மக்களவைத் தேர்தலை கருத்தில் கொண்டு இந்த இடைக்கால ஜாமின் வழங்கப்படுவதாகவும், ஜூன் 2ஆம் தேதி திரு. அரவிந்த் கெஜ்ரிவால் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பினை ஆம் ஆத்மி கட்சி வரவேற்றுள்ளது.

ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி இது என்று அக்கட்சி கருத்து தெரிவித்துள்ளது.

காங்கிரஸ், திமுக, திரிணமுல் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவினை வரவேற்றுள்ளன.

இதற்கிடையே, தில்லி திஹார் சிறையிலிருந்து திரு. அரவிந்த் கெஜ்ரிவால், சற்றுமுன் விடுவிக்கப்பட்டார்.

>>>><<<<

சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 6 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**Bijapur** மாவட்டத்திற்குட்பட்ட **Pidiya** வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். இதில் 6 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

>>>><<<<

வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட பணிக்குழுவின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

அஸ்ஸாம், அருணாச்சலப்பிரதேசம், மேகாலயா, மணிப்பூர், மிஸோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா ஆகிய மாநிலங்களின் அதிகாரிகளும், சிவில் விமானப் போக்குவரத்து, சிறுகுறு தொழில் மற்றும் தகவல் ஒலிபரப்பு துறைகளின் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

தொழில் கூட்டமைப்பு பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

ஹரியானாவில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. ஜெய்ராம் ரமேஷ், அம்மாநிலத்தில் ஆளும் பிஜேபி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை 3 சுயேச்சை உறுப்பினர்கள் விலக்கிக் கொண்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, அறுதிப்பெரும்பான்மை பலத்தை பிஜேபி தலைமையிலான அரசு இழந்து விட்டதாகவும் திரு. ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

>>>><<<<

பிரான்ஸில் நடைபெறவுள்ள **Cannes** திரைப்பட விழாவில் இந்தியா பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திரைப்பட விழா வரும் 15ஆம் தேதி தொடங்கி, 25ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் அமைக்கப்படவுள்ள இந்திய அரங்கு நம் நாட்டு திரைப்படக் கலைஞர்களுக்கு சர்வதேச வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை கூறியுள்ளது.

>>>><<<<

மகாராஷ்ட்ராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர்.

மும்பை – பூனே இடையேயான விரைவுச்சாலையில் **Bhorghat** அருகே சென்று கொண்டிருந்த லாரி, கட்டுப்பாட்டை இழந்து, இரண்டு வாகனங்கள் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>><<<<

நாடுமுழுவதும் கோடை வெயிலின் தாக்கம் சற்று குறைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

உத்தரபிரதேசம், தெலங்கானா, மகாராஷ்ட்ரா, மத்தியப்பிரதேசம், ஹிமாச்சலப்பிரதேசம், பீகார், மேற்குவங்கம், ஒடிசா, ஜார்க்கண்ட், ஆந்திரா மற்றும் ஜம்மு காஷ்மீரில் அனல் காற்று வீச வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் மட்டுமே நாளை வரை அனல் காற்று வீச வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>>>><<<<

உலக மல்யுத்த ஒலிம்பிக் தகுதிச் சுற்று போட்டியில், இந்தியாவின் **Nisha** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 68 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் வெற்றி பெற்றார்.

>>>><<<<

டென்மார்க் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Anupama Upadhyaya** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-17, 21-19 என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Tanya Hemanth-**ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Imad Farooqui Samiya** 21-14, 21-16 என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Tara Shah** –வை வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

>>>><<<<

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

>>>><<<<